**CC.No. 47/2010** தேதி**: 12.09.2025**

**<u>அசா 5 திரு. D.R. சூர்யகுமார் த/பெ டேவிட் மனுவில் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 ,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கணேசன் வழக்கறிஞர் வழங்கிய சட்ட கருததுரையின் அடிப்படையில்ர ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு எதிரிக்கு கடன் வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் கடன் வழங்கும்போது நான் பணியில் இல்லை. நட்ராஜன்பிள்ளைக்கு எனது வங்கியில் இருந்து கொடுத்தாக சொல்லப்படும் பதில் அறிவிப்பினை நான் காவல் துறையினரிடம் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் என்னிடம் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை. வங்கியில் இருந்து கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பில் உயில் ஆவணம் உண்மையான ஆவணம் என்றும் அதன் அடிப்படையில்தான் கடன் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.